FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8081644

1. District : திண்டுக்கல் PS: Year: FIR No.: 07/25 Date: 17.07.25
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு 2025 மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 10.07.25 at 11.00 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 16.07.25 at 12.15 hrs

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time : 08.00
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.07.25 நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 17.07.25 நேரம் 09.15

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் கிழக்கு சுமார் 10 km

Beat Number : (b) Address : உழவர் சந்தை அருகாமை, ம.மு.கோவிலூர்
முறைக் காவல் எண் முகவரி திண்டுக்கல் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. கார்த்திக் (b) Father's/ Husband's Name : J. மோகன்ராஜ் (வேட்)
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 22/25 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : கூலி (g) Address : கு. எண் 3/5 A வன்னியபட்டி, ம.மு.கோவிலூர்
தொழில் முகவரி திண்டுக்கல் கிழக்கு தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.எஸ். கோதண்டபாணி, க/பெ. கிராமசாமி, பஞ்சாலையில்
கிளார்க், ம.மு.கோவிலூர், திண்டுக்கல்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17-7-25

17/07/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

17.07.25 at 12.00 hrs

Name: பெயர் ஆ. தேவதீதாசானி

Rank: நிலை ..... No. எண் .....

காவல் ஆய்வாளர்,
உ.தி.க. பாளை,
திருநெல்வேலி

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:7/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 17.07.2025-ம் தேதி காலை 08.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல், திண்டுக்கல் கிழக்கு தாலுகா, ம.மூ.கோவிலூர், வன்னியபட்டி, கதவு எண்.3/5A-ல் வசிக்கும் திரு.J.மோகன்குமார்(லேட்) என்பவரது மகன் திரு.M.கார்த்திக் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று 17.07.2025-ம் தேதி காலை 09.15 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்.M.கார்த்திக், த/பெ.J.மோகன்குமார்(லேட்), கதவு எண்.3/5A, வன்னியபட்டி, ம.மூ.கோவிலூர், திண்டுக்கல் கிழக்கு தாலுகா, திண்டுக்கல். பெறுநர்.உயர்திரு.DSP அய்யா அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேற்சொன்ன முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் பதினொன்றாம் வகுப்பு வரை படித்து விட்டு தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். எனது அப்பா என்னுடைய சிறு வயதிலேயே இறந்துவிட்டார். எனது அம்மா திருமதி.ஆரோக்கியசெல்வி வேடசந்தூரில் உள்ள SSM மில்லில் வேலை பார்த்து வருகிறார். எனது தாத்தா MM கோவிலூர் அருகே வன்னியபட்டியில் கிரையம் வாங்கிய இடத்தில் கட்டிய வீட்டை கடந்த 17.04.2024-ம் தேதி எனது பெயருக்கு தானசெட்டில்மென்ட் எழுதிக் கொடுத்தார். கடந்த வருடம் 2024-2025 அவர் பெயரில் சொத்து வரி ரசீது MM கோவிலூர் ஊராட்சியில் ரூ.550/- செலுத்தி ரசீது போடப்பட்டுள்ளது. தற்போது பழைய வீட்டை இடித்துவிட்டு அந்த இடத்தில் சுமார் 783 சதுர அடியில் புதிதாக வீடு கட்டியுள்ளேன். தற்போது என்னுடைய வீட்டிற்கு எனது பெயரில் சொத்து வரி ரசீது வேண்டி MM கோவிலூர் ஊராட்சியில் கடந்த 25 நாட்களுக்கு முன்பு பஞ்சாயத்து கிளார்க் திருமதி.ஜோதிலட்சுமி அவர்களிடம் ஒரு விண்ணப்பம் கொடுத்தேன். அந்த விண்ணப்பத்துடன் எனது தாத்தா எனது பெயரில் தானசெட்டில்மென்ட் எழுதிக் கொடுத்த ஆவண எண் 1232/2024, நாள்.17.04.2024-ன் நகலை இணைத்து கொடுத்தேன். அதன்பின்பு கடந்த 01.07.2025-ம் தேதி எனது விண்ணப்பத்தை Online -ல் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்று பஞ்சாயத்து கிளார்க் திருமதி.ஜோதிலட்சுமி என்பவரின் கணவர் திரு.ராமசாமி ஏதோ ஒரு கம்ப்யூட்டர் சென்டரில் இருந்து அங்கு பணிபுரியும் நபரின் செல்போன் எண் 75020 63446 லிருந்து என்னுடைய செல்போன் எண் 9345329224-க்கு அழைத்து தற்போது பேசும் செல்போன் எண்ணுக்கு ரூ.300/- G Pay மூலம் அனுப்புமாறு சொன்னார். அதனால் நானும் அன்றைய தினம் அந்த எண்ணிற்கு ரூ.300/- அனுப்பினேன். அதன் பின்னர் எனக்கு சொத்து வரி ரசீது எதுவும் வழங்கவில்லை. பின்பு கடந்த 10.07.2025-ம் தேதி காலை 11.00 மணிக்கு MM கோவிலூர் பஞ்சாயத்து அலுவலகத்தில் கிளார்க் திருமதி.ஜோதிலட்சுமி அவர்களை சந்தித்து என்னுடைய சொத்து வரி ரசீது சம்பந்தமாக

கேட்டேன். அதற்கு அவர் ரூ.3,000/-ம் வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. ஏதாவது குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.3,000/- கொடுத்தால் தான் உங்களுக்கு சொத்து வரி ரசீது போட்டுக்கொடுக்க ஏற்பாடு செய்வேன் என்று கூறினார். நான் அதற்கு சொத்து வரி மூவாயிரம் ரூபாயா எனக் கேட்டேன். அதற்கு அவர் சொத்து வரி ரசீது தயார் செய்வதற்கு எனக்கு ஆகும் செலவு தான் இது என்று கூறினார். மேலும் பணம் கொடுக்க வில்லை என்றால் உங்கள் விண்ணப்பத்தை ரத்து செய்து விடுவேன் என்று கூறினார். அதன்பிறகு நான் வீட்டுக்கு வந்து விட்டேன். பின்பு அவர் கடந்த 11.07.2025 மற்றும் 12.07.2025 ஆகிய இரண்டு தினங்களும் அவருடைய செல்போன் எண் 9566740729-லிருந்து என்னுடைய செல்போன் எண்ணுக்கு போன் செய்து பணத்தை கொண்டு வந்து கொடுத்தால் தான் சொத்து வரி ரசீது போடுவதற்கு ஏற்பாடு செய்ய முடியும் என்று கூறினார். அதற்கு நான் பணத்தை ரெடி பண்ணிக்கொண்டு வருகிறேன் என்று சொன்னேன். ஆனால் என்னால் பணத்தை ரெடி பண்ணமுடியவில்லை. அதனால் நான் நேற்று 16.07.2025-ம் தேதி மதியம் சுமார் 12.15 மணிக்கு பஞ்சாயத்து கிளார்க் திருமதி.ஜோதிலட்சுமி அவர்களை MM கோவிலூர் பஞ்சாயத்து அலுவலகத்தில் சந்தித்து அவரிடம் நானே கூலி வேலை செய்கிறேன், என்னால் அவ்வளவு பணம் ஏற்பாடு செய்ய முடியவில்லை. ஏதாவது கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் பழைய வீட்டிற்கு சொத்துவரி ரசீது போட வேண்டுமா அல்லது புது வீடு கட்டியிருக்கிறாயா என்று கேட்டார். அதற்கு நான் பழைய வீட்டை இடித்துவிட்டு புதிதாக 783 சதுர அடியில் வீடு கட்டியுள்ளேன் என்று சொன்னேன். அதற்கு அவர் சொத்து வரி ரூ.1000/- கட்ட வேண்டி இருக்கும் என்றும், சொத்து வரி ரசீது போடுவதற்கு எனக்கு செலவுக்கு ரூ.3,000/- கொடுக்க வேண்டும் என்றும், ரூ.3,000/- கொடுத்த பிறகு தான் சொத்து வரி ரசீது தயார் செய்வேன் என்றும் நான் சொல்லும்போது சொத்து வரி ரூ.1,000/- கொடுக்க வேண்டும் என்றும் கூறினார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் செலவுக்கு பணம் கொடுக்க மனசு இல்லையா என்று கேட்டார். மேலும் பணம் கொடுத்தால் தான் வேலை நடக்கும் என்றும் இல்லாவிட்டால் கேன்சல் செய்து விடுவேன் என்றும், மேலும் மேற்படி கேட்ட பணத்தை நாளை 17.07.2025-ம் தேதி காலை அலுவலகத்தில் வந்து கொடுக்குமாறு கூறினார். பின்பு நான் யோசனை செய்ததில் சொத்து வரி ரசீது பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ.3,000/- லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.3,000/- லஞ்சமாக கேட்ட MM கோவிலூர் பஞ்சாயத்து கிளார்க் திருமதி.ஜோதிலட்சுமி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த புகாருடன் எனது தாத்தா எனது பெயரில் தானசெட்டில்மென்ட் எழுதிக்கொடுத்த ஆவண எண் 1232/2024, நாள்.17.04.2024-ன் நகல் மற்றும் 2023-24, 2024-25 இரண்டு வருடங்களுக்கு எனது தாத்தா பெயரில் செலுத்திய சொத்துவரி ரசீதின் நகலை இணைத்துள்ளேன். மேலும் MM கோவிலூர் பஞ்சாயத்து கிளார்க் திருமதி.ஜோதிலட்சுமி அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.3,000/-ம் கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை

எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (M.Karthick, 17.07.2025)

Sir, Received the complaint on 17.07.2025 at 08.00 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.07/2025, u/s.7(a) of P.C Act 1988, as amended by the PC (Amendment) Act 2018, on 17.07.2025 at 09.15 hrs and took up investigation. Sd/-xxxxx (J.Rupa Geetharani, Inspector of Police, V&AC, Dindigul 17.07.2025)

Original FIR along with written complaint of Tr.M.Karthick, S/o.Tr.J.Mohankumar(late), Door No.3/5A, Vanniapatty, MM Koviloor, Dindigul East Taluk, Dindigul and with the relevant documents are submitted to the Hon'ble Principle District Sessions Judge Court, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

JRupa 17/07/25

(J.Rupa Geetharani),
Inspector of Police,
V&AC,
Dindigul